ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






### பழங்குடிகளே நாட்டின் உண்மையான உரிமையாளர்கள்

# ஆதிவாசி தான்

## வனவாசி என்ற சொல், இந்தியாவின் அசல் உரிமையாளர்கள் நீங்கள் என்ற உரிமையை மறுக்கிறது; காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி

**வயநாடு, ஆக.14–**

பழங்குடிகளே நாட்டின் அசலான உரிமையாளர்கள் என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தனது வயநாடு தொகுதியில் பேசியுள்ளார்.

உச்ச நீதிமன்ற உத்தரவையடுத்து தகுதி நீக்க அறிவிப்பை திரும்ப பெற்றதால், மீண்டும் எம்பி ஆக பொறுப்பேற்ற ராகுல் காந்தி, முதல்முறையாக வயநாடு தொகுதிக்கு சனிக்கிழமை வந்தடைந்தார். நேற்று இரண்டாவது நாளில் ராகுல் காந்தி, வயநாட்டில் உள்ள புற்றுநோய் சிகிச்சை மையத்தின் புதிய மின் கட்டமைப்பு சேவையை அவர் தொடங்கி வைத்தார்.



அந்த நிகழ்ச்சியில் பேசிய ராகுல் காந்தி, "பழங்குடிகளே நாட்டின் அசலான உரிமையாளர்கள். அவர்களைக் குறிக்க ஆதிவாசி என்றொரு வார்த்தை இருக்கிறது. அதன் அர்த்தம் நிலத்தின் அசல் உரிமையாளர்கள் என்பதாகும். அந்த வார்த்தை ஒரு குறிப்பிட்ட ஞானத்தின் அடையாளம். அது நாம் வாழும் இந்த பூமியின் மீதான புரிதலின் வெளிப்பாடு, நமது பூமி மீது நாம் கொண்டிருக்கும் உறவினை சுட்டிக்காட்டுவது. ஆதிவாசி எனும் வார்த்தை நமது பழங்குடியின சகோதர, சகோதரிகள் தான் தேசத்தின் உண்மையான உரிமையாளர்கள் என்பதை நாம் மதித்து ஏற்றுக்கொள்ள உதவுகிறது. அதனால் உண்மையான உரிமையாளர்களுக்கு நிலத்தின், வனத்தின் மீதான உரிமையை வழங்க வேண்டும். அவர்கள் விரும்பியதை செய்யும் உரிமையையும் வழங்க வேண்டும்.

இந்த மண்ணின் அசல் உரிமையாளர்கள் என்ற வகையில் உங்களின் குழந்தைகள் பொறியாளர் ஆகவேண்டுமா? மருத்துவர் அல்லது வழக்கறிஞர் ஆக வேண்டுமா? அல்லது தொழில் முனைவோராக வர வேண்டுமா என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அதேவேளையில் வனத்தின் மீது உங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்கக்கூடாது. வனத்திலிருந்து விளைவிக்கும் பொருட்களுக்கான உரிமை உங்களுடையது.

ஆனால் சிலர் உங்களை 'வனவாசி' என்று அழைக்கிறார்கள். வனவாசி என்ற சொல், இந்தியாவின் அசல் உரிமையாளர்கள் நீங்கள் என்ற உரிமையை மறுக்கிறது. அது உங்களை கட்டுப்படுத்துகிறது. வனவாசி என்ற சொல்லின் பின்னால் இருக்கும் அர்த்தம், நீங்கள் வனத்தினுள் மட்டுமே இருக்க வேண்டும் என்று சுருக்குகிறது. இதை ஏற்பதற்கில்லை. இந்த சொல் உங்களின் வரலாற்றை சிதைக்கிறது. உங்களின் பாரம்பரியம் மற்றும் நாட்டுடன் உங்களது உறவை சிதைக்கிறது.

ஆனால் எங்களுக்கு நீங்கள் ஆதிவாசி தான். உங்களிடம் இருந்து நாங்கள் நிறைய கற்றுக் கொள்கிறோம். உதாரணத்துக்கு இன்று உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது ஒரு பேஷன் வார்த்தையாகிவிட்டது. ஆனால் 2000, 3000 ஆண்டுகளுக்கு முன்னரே ஆதிவாசிகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிப் பேசி நமக்கு முன்னோடிகளாக இருக்கிறார்கள்.

ஆதிவாசிகளிடமிருந்து வரலாறு, பாரம்பரியம், சுற்றுச்சூழல் மட்டுமல்ல ஒருவருக்கொருவர் எப்படி அணுகுவது, எப்படி மதிப்பது என்பதைக் கூட கற்றுக் கொள்ள முடியும். ஆதிவாசிகளின் குழந்தைகளுக்கு சிறந்த கல்வி, சிறந்த மருத்துவ வசதி கிடைக்கவேண்டும். நாங்கள் உங்களுக்கு எப்போதும் உற்ற துணையாக இருப்போம்" என்றார்.

முன்னதாக சனிக்கிழமை ராகுல் காந்தி உதகையில் முத்தநாடு மந்தில் பழங்குடியின மக்களை சந்தித்தார். சுமார் அரை மணி நேரம் அங்கு செலவிட்ட ராகுல் காந்தி, அங்கிருந்து வயநாடு புறப்படும் போது, அவரது பயணம் குறித்து கேட்டதற்கு, 'நான் பழங்குடியின மக்களை நேசிக்கிறேன். அவர்களை சந்தித்தது இனிமையான தருணம்' என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.



▸ புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக மருத்துவரணி சார்பில் அதன் அமைப்பாளர் டாக்டர் மு.க. முத்துக்கருப்பன் தலைமையில் புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ரத்ததான முகாம் நடைபெற்றது. அமைச்சர் மெய்யநாதன், மாவட்ட செயலாளர் செல்லபாண்டியன், எம்எல்ஏ முத்துராஜா, நகர செயலாளர் செந்தில் உள்ளிட்டர் பலர் பங்கேற்றனர். முகாமில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர்.

# ஜாதி பிரச்சினைக்கு திமுக ஒன்றியச் செயலாளர் காரணம் அண்ணாமலை அதிர்ச்சி தகவல்



**கோவில்பட்டி, ஆக.14–**

**மத்திய பாஜக ஆட்சியின் 9 ஆண்டுகால சாதனையை விளக்கி பாஜக மாநில தலைவர் அண்ணாமலை 'என் மண் என் மக்கள்' நடைப் பயணத்தை தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் சனிக்கிழமை தொடங்கினார்.**

வழி நெடுகிலும் ஏராளமான பாஜகவினர், பொதுமக்கள் அவருக்கு வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து அவர் பிரச்சார வாகனத்தில் நின்றபடி பேசியதாவது: அதிகமான குளங்கள் இருந்ததால் இந்த ஊரை விளாத்திகுளம் என அழைக்கின்றனர். ஆனால், இங்குள்ள எம்.எல்.ஏ. எந்த குளத்தையும் விட்டு வைக்கவில்லை.

ஒரு புறம் மக்கள் வைப்பாற்றில் தண்ணீர் வேண்டும் என்கின்றனர். மறுபுறம் எம்.எல்.ஏ. மணல் வேண்டும் என்கிறார். அவர் எப்போது எந்த கட்சியில் இருப்பார் என்று தெரியாது. காற்றாலைக் காரர்களிடம் இவர் கமிஷன் கேட்ட ஆடியோ தமிழ்நாடு முழுவதும் பரவியது. இவர் இந்த ஊருக்கு எந்த வேலையும் செய்யாமல், மணல் திருடுவதை மட்டுமே தனது முதன்மை பணியாக வைத்துள்ளார்.

இதனால் இந்த பூமி வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளது. திமுக தனது 2021-ம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில் செண்பகவல்லி அணையை சரி செய்து, இந்த 3 மாவட்டங்களுக்கும் முழுமையான தண்ணீரை கொடுப்போம் என பொய் வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்தது. குலசேகரன் பட்டினத்துக்கு பாரத பிரதமர் புதிய ராக்கெட் ஏவுதளம் வழங்கி உள்ளார்.

இதனை ஒரு சுற்றுலா தலமாக மாற்றுவோம் என மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். இதன் மூலம் ரூ.50 ஆயிரம் கோடி அளவிலான தொழிற்சாலைகள் வந்துவிடும். மத்திய அரசு சாமானிய மக்களுக்காக ஆட்சி நடத்துகிறது. மத்திய அரசு திட்டங்களால் பயனடைந்த லட்சக்கணக்கான மக்கள் உள்ளனர்.

இப்படிப்பட்ட பிரதமர் மீண்டும் பிரதமராக வரக்கூடாது என தமிழக முதல்வர் கூறுகிறார். பிரதமர் மோடியின் மகனும், மருமகனும் 30 ஆயிரம் கோடி ரூபாய் சொத்து சேர்த்துள்ளனரா? துபாய்க்கு போய் ரூ.6,100 கோடி கொண்டு வருவேன் என்று சொல்லி, ஒன்றரை ஆண்டுகளாகியும் 6 ரூபாய் கூட கொண்டு வராதவரா? மணல் மற்றும் தண்ணீரை திருடி விற்பனை செய்கிறாரா?

தமிழக முதல்வர் ஆட்சி நடத்துவது தனது குடும்பத்துக்கு, மகனுக்கு, மருமகனுக்காகத்தான். எதை செய்தாலும் இவர்கள் நல்லாயிருப்பார்களா என்றுதான் அவருக்கு யோசனை. நாங்குநேரி சாதிக்கலவரத்துக்கு திமுக ஒன்றியச் செயலாளர்தான் காரணம். 3-வது முறையாக 400 எம்.பி.க்களுடன் மீண்டும் மோடி பிரதமராக வருவார்.

தமிழகம், புதுச்சேரியில் இருந்து 40 எம்.பி.க்களை நாம் உருவாக்கி கொடுக்க வேண்டும். இந்திய பிரதமராக மோடி இருந்தால் தமிழகத்தில் அரசியல் மாற்றம் நடக்கும். இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக எட்டயபுரம் மணிமண்டபத்தில் உள்ள பாரதியாரின் சிலைக்கு மாலை அணிவித்தார். தொடர்ந்து ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூரில் பயணம் மேற்கொண்டார்.

# நாங்குநேரி மாணவனுக்கு ஸ்டான்லி மருத்துவர்கள் மூலம் சிகிச்சை அமைச்சர் மா.சுப்பிரமணியன்

**நாங்குநேரி, ஆக.14–**

நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் சாதிய பாகுபாடு காரணமாக அரிவாளால் வெட்டி தாக்கப்பட்ட மாணவனை ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சபாநாயகர் அப்பாவு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினர்.



பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாணவனுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டதாக தெரிவித்தார். மேலும், மாணவனுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக சென்னை ஸ்டான்லி மருத்துவமனை சிறப்பு மருத்துவர்களை வரவழைத்து சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மகனுக்கு வேலைவாய்ப்பு வழங்கவேண்டும் என மாணவனின் தாயார் கோரிக்கை வைத்திருக்கிறார். அந்த மாணவன் 18 வயதை கடந்ததும் அரசு வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். காயமடைந்த இருவரும் குணமடைந்ததும் அவர்களை பாதுகாப்பாக படிப்பை தொடர நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சியர் கூறியிருக்கிறார். அவர்களுக்கு தேவையான கல்வியை தொடர அரசு துணை நிற்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



▸ இந்திய திருநாட்டின் 15ந் தேதி சுதந்திர தின விழாவை முன்னிட்டு நேற்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில் மூன்றாவது அணிவகுப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றதை படத்தில் காணலாம்.

# இன்று

14-8-23

மாத சிவராத்திரி

சக வருடம் 1945 சிராவணம் 23

| சோபகிருது ஆடி 29 | AUG - MON திங்கள் | முஹர்ரம் 26 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 226 / 139 | மேஷம் - விருத்தி |

தேய். திரயோதசி 15.08 (மா. 12.07) புனர்பூசம் 18.26 (மா. 01.26) தியாஜ் 40.28 அகஸ் 30.52 அமிர்த 18.26 மேல் சித்த. மாத சிவராத்திரி. சேலம் செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன் ஸப்தாவரணம். பத்ராசலம் இராமபிரான் புறப்பாடு. சங்கரன்கோவில் ஸ்ரீகோமதியம்மன் புஷ்ப பாவாடை தரிசனம்.

| | நல்லநேரம் | கௌ.நு.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 1.45-2.45 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; கடக லக்கனம் இருப்பு நா. 0 வி. 41; சந்திராஷ்டமம் கேட்டை, மூலம்; கரணம் : 9-10.30; சூரிய உதயம் : 6.04

இராசிபலன்: மேஷம் - விருத்தி; ரிஷபம் - நலம்; மிதுனம் - ஓய்வு; கடகம் - சிரமம்; சிம்மம் - லாபம்; கன்னி - நட்பு; துலாம் - பக்தி; விருச்சி - நன்மை; தனுசு - வெற்றி; மகரம் - களிப்பு; கும்பம் - சோர்வு; மீனம் - போட்டி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்




புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,540 | Rs. 6,010 |

# மின் கட்டணம் செலுத்தவில்லை என எஸ்எம்எஸ் பாடகி சின்மயி மாமனாரிடம் ரூ.5.83 லட்சம் மோசடி

சென்னை, ஆக. 14-

மின் கட்டணம் செலுத்தவில்லை என செல்போனில் தொடர்பு கொண்டு பேசி, பாடகி சின்மயி மாமனாரிடம் நூதன முறையில் ரூ.5.83 லட்சத்தை மர்ம நபர் மோசடி செய்துள்ளார்.

சென்னை அபிராமபுரம், டாக்டர் ரங்கா சாலையில் வசிக்கும் பாடகி சின்மயி மாமனார் ரவீந்திரனின் செல்போனுக்கு மின் கட்டணம் செலுத்தவில்லை என குறுஞ் செய்தி அனுப்பி லட்சக் கணக்கான பணத்தை மர்ம நபர்கள் அபகரித்துள்ளனர். இது குறித்து அவர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.

அந்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது: எனது செல்போனுக்கு கடந்த 11-ம் தேதி தமிழ்நாடு மின்சார வாரியம் என குறிப்பிட்டு குறுஞ் செய்தி ஒன்று வந்தது. அதில், நான் மின் கட்டணம் இன்னும் செலுத்தவில்லை என்றும், உடனடியாக மின் கட்டணம் செலுத்தவில்லையென்றால், மின்சார இணைப்பு துண்டிக்கப்படும் என்றும்



கூறப்பட்டிருந்தது.

மேலும், அத்துடன், ஒரு செல்போன் எண் அனுப்பப்பட்டிருந்தது. அந்த எண்ணை தொடர்பு கொண்டபோது, எனது மின்சார பயனீட்டாளர் எண் மற்றும் ஒரு லிங்க் அனுப்பி அதன் மூலம் 10 ரூபாய் பணம் செலுத்தி உறுதிபடுத்திக் கொள்ளுமாறு தெரிவித்தார். அப்போது, எனது எஸ்பிஐ ஏடிஎம் கார்டு மூலம் 10 ரூபாய் செலுத்த முயன்றபோது தொழில்நுட்ப கோளாறு காரணமாக பணம் செலுத்த இயலவில்லை.


இது பற்றி லிங்க் அனுப்பியவரிடம் கூறியபோது, அந்த நபர் வேறொரு கார்ட் மூலம் பணம் செலுத்துமாறு கூறினார். அவ்வாறு எனது விவரங்கள் குறித்து 1 மணி நேரம் என்னிடம் பேசினார். அப்போது, எனது வங்கி கணக்கில் இருந்த பணம் ரூ.4,98,000-ம் அதனை தொடர்ந்து மற்றொரு வங்கி கணக்கில் இருந்து ரூ.85,000-ம் அடுத்தடுத்து எடுக்கப்பட்டு விட்டது. பணம் முழுவதும் எடுக்கப்பட்டதும் அவர் எனது அழைப்பை துண்டித்து விட்டார். எனவே, எனது பணத்தை மீட்டு தர வேண்டும். சம்பந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இது பற்றி சின்மயி வெளியிட்டுள்ள பதிவில், "எங்கள் குடும்பத்தில் வயதானவரிடம் மின்சார கட்டணம் என்ற பெயரில் மோசடி நடைபெற்றுள்ளது. ஓ.டி.பி எண் பகிரப்படாமலேயே இந்த மோசடியை எப்படி செய்தார்கள் என்பது கொடுமையாக இருக்கிறது. செல்போனுக்கு வந்த லிங்கை க்ளிக் செய்ததும் வங்கிக் கணக்கில் இருந்த பணம் காணாமல் போய் விட்டது. வயதானவர்களைக் குறி வைத்து இது போன்ற மோசடி நடக்கிறது. சைபர் கிரைமில் புகார் செய்துள்ளோம். உங்களுக்குத் தெரிந்த வயதானவர்களிடம் சொல்லி அவர்களைப் பாதுகாக்கவும்" என்று தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் நாட்டின் இடைக்கால பிரதமராக அன்வர் உல் ஹக் ககர் நியமனம்

லாகூர் , ஆக. 14-

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது 100-க்கும் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அரசுக்கு வந்த பரிசுப் பொருட்களை விற்று சொத்து சேர்த்ததாக இம்ரான்கான் மீது 'தோஷகானா' வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக இம்ரான்கானின் எம்.பி. பதவி பறிபோனது. ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது. அதைத் தொடர்ந்து இம்ரான்கான் உடனடியாக



கைது செய்யப்பட்டு பஞ்சாப் மாகாணத்தின் அட்டாக் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து பாகிஸ்தான் பாராளுமன்றம் இரவோடு இரவாகக் கலைக்கப்பட்டது. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் இன்னும் 90 நாட்களில் தேர்தல் நடத்தப்பட வாய்ப்புள்ளது. இந்நிலையில், பாகிஸ்தான் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் தற்காலிக பிரதமராக பலூசிஸ்தான் எம்.பி. அன்வர் உல் ஹக் ககர் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் பதவியில் இருந்து விலகும் ஷெபாஸ் ஷெரீப் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ராஜா ரைஸ் அகமது இணைந்து தற்காலிகபிரதமராக அன்வர் உல் ஹக் ககரை நியமித்துள்ளனர். அடுத்த பிரதமர் தேர்வுசெய்யப்படும்வரை அன்வர் தற்காலிக பிரதமராக செயல்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்காலிகபிரதமர் நியமனத்திற்கு பாகிஸ்தான் அதிபர் ஒப்புதல் அளித்துள்ளார்.


கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437

# கனடாவில் இந்து கோவில் சேதம் காலிஸ்தான் தலைவர் குறித்து போஸ்டரை ஒட்டிச்சென்ற மர்ம நபர்கள்

கனடா , ஆக. 14-

இந்தியாவில் இருந்து பஞ்சாப் மாநிலத்தை பிரித்து தனி நாடாக அறிவிக்க வேண்டும் என காலிஸ்தான் பிரிவினைவாதிகள் தெரிவித்து வருகின்றனர். காலிஸ்தான் ஆதரவாளர்கள் உலகின் பல இடங்களில் உள்ளனர்.

குறிப்பாக கனடாவில் அதிக அளவில் உள்ளனர். அவர்கள் இந்தியாவுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். காலிஸ்தான் செயல்பாடுகள் அதிகரித்து வருவதற்கு எதிராக இந்தியா தனது கவலையை கனடாவிடம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே இந்து கோவில்கள் கனடாவில் தாக்கப்படும் சம்பவம்



நடைபெற்று வருகிறது. கடந்த ஜனவரி மாதம் மற்றும் ஏப்ரல் மாதம் இந்து கோவில்கள் தாக்கப்பட்டன. இந்த நிலையில் நேற்றிரவு பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள லட்சுமி நாராயணன் கோவில் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதோடு கோவில் கதவில் ஜூன் 18-ந்தேதி நடைபெற்ற கொலையில் இந்தியாவின் பங்கு குறித்து கனடா விசாரணை செய்கிறது என போஸ்டரை ஒட்டிவைத்து சென்றுள்ளனர்.

மேலும், காலிஸ்தான் வாக்கெடுப்பு குறித்த போஸ்டரையும் ஒட்டி வைத்துள்ளனர். கனடாவின் சர்ரே பகுதியில் காலிஸ்தான் பயங்கரவாத அமைப்பான காலிஸ்தான் டைகர் படையின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். குருநானக் சீக்கியர் குருத்வாரா சாஹிப்பின் தலைவரான அவர், குருத்வாரா வளாகத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டதார். இதனைத் தொடர்ந்து இந்த செயலில் அவரது ஆதரவாளர்கள் இந்த செயலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# கொத்துக் குண்டுகள் மூலம் டொனெட்ஸ்க் பகுதியில் தாக்குதல் ஒருவர் பலி

## உக்ரைன் மீது ரஷியா குற்றச்சாட்டு

ரஷியா , ஆக. 14-

உக்ரைன்- ரஷியா இடையிலான போரில், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளிடம் ராணுவ உதவி பெற்று உக்ரைன் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. குறிப்பாக பதில் தாக்குதலில் டிரோன்களை அதிக அளவில் பயன்படுத்தி வருகிறது. அடிக்கடி ரஷியாவின் தலைநகர் மாஸ்கோவை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது. அவ்வாறு நடத்தும்போதெல்லாம், ரஷியா பதிலடியாக ஏவுகணை தாக்குதல் நடத்துகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டு ஏவுகணை தாக்குலை ரஷியா நடத்தியது. அதில் குடியிருப்பு கட்டிடங்கள் உள்பட பல கட்டிடங்கள் தரைமட்டமாகின. மீட்புப்படையினர்



இடிபாடுகளை நீக்கியபோது, ஆறு பேர் உயிரிழந்தது தெரியவந்தது. இந்த நிலையில் உக்ரைனிடம் இருந்து டொனெட்ஸ்க் கைப்பற்றிய ரஷியா, தனது பகுதியாக அறிவித்துள்ளது. இந்த பிராந்தியத்தின் மாகிவ்கா பகுதியில் உக்ரைன் தாக்குதல் நடத்தியதாகவும், அதுவும் அமெரிக்கா வழங்கிய கொத்துக் குண்டுகள் மூலம் பயன்படுத்தப் பட்டதாகவும் ரஷியா குற்றம்சாட்டியுள்ளது. இந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்த நிலையில் 6 பேர் காயம் அடைந்துள்ளனர்.

# சர்வதேச ஹாக்கி தரவரிசையில் 3வது இடத்திற்கு முன்னேறிய இந்திய அணி

சென்னை , ஆக. 14-

சென்னை எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கத்தில் 7-வது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் கோப்பை தொடர் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில், இந்திய அணி, மலேசியாவுடன் மோதியது. இந்த போட்டியில் இந்திய அணி 4-3 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இதன்மூலம் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டி தொடரில் இந்திய அணி 4-வது முறையாக பட்டம் வென்றுள்ளது. ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை தொடரில் சாம்பியன்



பட்டத்தை வென்றதன் மூலம், உலக ஹாக்கி தரவரிசை பட்டியலில் இந்திய அணி 4வது இடத்தில் இருந்து 3வது இடத்திற்கு முன்னேறியது. இந்திய அணி 2771.35 தரநிலைப் புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளது.

இந்த பட்டியலில் 3095.90 புள்ளிகளுடன் நெதர்லாந்து முதலிடத்தில் உள்ளது. பெல்ஜியம் (2917.87) இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்தியாவைத் தொடர்ந்து, இங்கிலாந்து நான்காவது இடத்திலும், ஜெர்மனி ஐந்தாவது இடத்திலும் உள்ளன. ஆஸ்திரேலியா ஆறாவது இடத்தில் உள்ளது. 7 முதல் 10வது இடங்களை ஸ்பெயின், அர்ஜென்டினா, மலேசியா மற்றும் நியூசிலாந்து அணிகள் பிடித்துள்ளன.

# சுதந்திர தின ஸ்பெஷல். பயனர்களுக்கு சூப்பர் சலுகைகள் அறிவித்த வோடபோன் ஐடியா

டெல்லி , ஆக. 14-

வோடபோன் ஐடியா (வி) நிறுவனம் தனது பிரீபெயிட் பயனர்களுக்கு புதிய சலுகைகளை அறிவித்து இருக்கிறது.

இந்தியாவின் 77-வது சுதந்திர தினத்தை ஒட்டி புதிய சலுகைகள் அறிவிக்கப்பட்டு உள்ளது. இவை ஆகஸ்ட் 12-ம் தேதி துவங்கியுள்ளது ஆகஸ்ட் 18-ம் தேதி வரை வழங்கப்பட இருக்கிறது. மேலும் இவை வி அதிகாரப்பூர்வ செயலியில் மட்டுமே வழங்கப்படுகிறது. வி சுதந்திர தின சலுகை விவரங்கள்: ரூ. 199 மற்றும் அதற்கும் அதிக தொகை கொண்ட ரிசார்ஜ்களுக்கு அதிகபட்சம் 50ஜிபிவரையிலான டேட்டா. ரூ. 50, ரூ. 75, ரூ. 1449 மற்றும் ரூ. 3 ஆயிரத்து 099 ரிசார்ஜ்களுக்கு உடனடி தள்ளுபடி. வி செயலியில் "ஸ்பின் தி வீல்" பரிசு போட்டி நடைபெறுகிறது.

இதில் பயனர்களுக்கு ரிசார்ஜ் சலுகைகள் அல்லது டேட்டா பேக், சோனிலிவ் சந்தா மற்றும் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. இந்த சலுகைகள் அனைத்தும் ஆண்ட்ராய்டு மற்றும் ஐ போனுக்கான வி செயலியில் பிரத்யேகமாக வழங்கப்படுகிறது.

# நாங்குநேரி சம்பவத்தால் தமிழகம் முழுவதும் அதிர்ச்சி ஜாதி வன்மம், ஆயுத கலாச்சாரத்தில் சிக்கும் மாணவர்கள்

திருநெல்வேலி , ஆக. 14-

நாங்குநேரியில் வீடு புகுந்து பள்ளி மாணவரும், அவரது தங்கையும் வெட்டப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஜாதி வன்மமும், ஆயுத கலாச்சாரமும் மாணவர்களிடம் தலை தூக்குவதை தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி பெருந்தெருவைச் சேர்ந்த கூலித்தொழிலாளி முனியாண்டி - அம்பிகாபதி தம்பதியரின் 17 வயது மகன் வள்ளியூர் அரசு பள்ளியில் பிளஸ் 2 படிக்கிறார். அதே பள்ளியில் படிக்கும் நாங்குநேரியைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த 9-ம் தேதி இரவில் முனியாண்டியின் வீட்டுக்குள் புகுந்து மாணவரையும், அவரதுதங்கையையும் அரிவாளால் வெட்டினர். படுகாயமடைந்த இருவரும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தை பார்த்த அவர்களது உறவினர் கிருஷ்ணன் அதிர்ச்சியில் உயிரிழந்தார்.

நாங்குநேரி போலீஸார் வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட 5 பிரிவுகளில் வழக்குப் பதிந்து, பிளஸ் 2 மாணவர்கள் 4 பேர் மற்றும்3 சிறார்களை கைது செய்துள்ளனர். அவர்கள் அனைவரும் திருநெல்வேலி கூர்நோக்கு இல்லத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பள்ளிப் பருவத்திலேயே ஜாதிவன்மமும்,ஆயுதங்களைக் கையாளும் குணமும் பள்ளி மாணவர்களிடையே தலைதூக்கி உள்ளதை ஆட்சியாளர்களும், அரசியல் கட்சியினரும் கண்டித்திருக்கின்றனர். அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன்,எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் வலியுறுத்தியுள்ளார்.

நாங்குநேரி சம்பவத்துக்கு சில நாட்களுக்கு முன்பாக வள்ளியூரில் பெட்ரோல் வெடிகுண்டு தயாரித்து, அதனை வெடிக்க வைத்து வீடியோ வெளியிட்ட சிறுவர்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளனர். பாளையங்கோட்டை அரசு உதவிபெறும் பள்ளி ஒன்றில் வகுப்பறையில் செல்போனில் வீடியோ பார்த்த மாணவர்களைக் கண்டித்த ஆசிரியர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். எந்த ஒரு செயலையும் ஜாதி, மதக் கண்ணோட்டத்துடன் அணுகும் போக்கு தென் மாவட்டங்களில் அதிகரித்து விட்டது.

இது குறித்து,



திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மனநலத்துறை உதவி பேராசிரியர் டாக்டர் ஆ.காட்சன் கூறியதாவது: மாணவர்களை கண்டிப்பதற்கு ஆசிரியர்களும், தண்டிப்பதற்கு காவல்துறையும் தற்போது தயாராக இல்லை. இதனால், குற்ற உணர்ச்சியற்றவர்களாக, குழு மனப்பான்மை உள்ளவர்களாக சமூக விரோத செயல்களில் சில மாணவர்கள் ஈடுபடுகிறார்கள்.

அடுத்தவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் தலைமுறையை உருவாக்க வேண்டும்.போதை ஒழிப்பு மையங்கள், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் இடங்கள், குற்றவாளிகளுக்கு தண்டனை அளிக்கப்படும் இடங்களை மாணவர்கள் பார்வையிட வைக்க வேண்டும். தண்டனை இல்லாத சமுதாயம் சீராகாது. தண்டனையை அளவுக்குமீறி அளிப்பதும் எதிர்வினையை உருவாக்கும். இளஞ்சிறார்களை சிறந்தவர்களாக உருவாக்க அனைவரும் செயலாற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக குற்றவியல் மற்றும் குற்ற நீதியியல்துறைத் தலைவர் பேராசிரியர் சையது உமர் கத்தாப் கூறும்போது, "ஜாதிய வன்முறைகள், இணையவழி குற்றங்களைத் தடுப்பதில் அனைவருக்கும் பொறுப்புணர்வு இருக்க வேண்டும்.

மாணவர்களின் குற்ற நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்களின் தாக்கம் அதிகம். தங்களை பெரியவர்களாக சித்தரித்து, மற்றவர்களிடம் கவனம் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் மாணவர்கள் திசைமாறுகிறார்கள். விளையாட்டு, என்சிசி, என்எஸ்எஸ், போன்றவற்றை திறம்பட செயல்படுத்த வேண்டும்" என்றார்.

மாணவர்களை சீர்படுத்த முயற்சிக்கும் ஆசிரியர்களும், குற்றங்களைத் தடுக்க முயலும் போலீஸாரும், வாக்கு அரசியலுக்கு பயந்து துறை ரீதியிலான தண்டனைக்கு அடுத்தடுத்து உள்ளானதால், தங்கள் கடமையில் இருந்து அவர்கள் விலகி நிற்கிறார்கள். தென்மாவட்டங்களின் நிலைமை இது.

இது குறித்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசுப் பள்ளி ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் ஒருவர் கூறியதாவது: பள்ளிகளில் நீதிபோதனை வகுப்புகள் குறைந்து வருகின்றன. அப்படியே வகுப்புகள் நடைபெற்றாலும் அதில் ஜாதி பாகுபாடு மற்றும் ஜாதி வன்மத்தை தவிர்ப்பது குறித்து ஆசிரியர்களால் விழிப்புணர்வு ஏற்படுத்த முடியாது. ஏனெனில் ஆசிரியர்களும் ஜாதி ரீதியில் தாக்கப்பட்ட சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளன.

சமீப காலமாக போதைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்குகளை பள்ளி, கல்லூரிகளில் போலீஸார் நடத்தி வெற்றிகண்டுள்ளனர். அதுபோல், ஜாதிபாகுபாட்டை ஒழிப்பது குறித்தும் பள்ளி, கல்லூரிகளில் போலீஸார் மூலம் சீரான இடைவெளியில் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# சுற்றுலா சார்ந்த வர்த்தகத்துக்காக உத்தமபாளையத்தில் கட்டிடங்களாக மாறிவரும் விளைநிலங்கள்

**உத்தமபாளையம் , ஆக. 14–**

சின்னமனூர், உத்தமபாளையம் இருவழிச் சாலையில் சுற்றுலா வர்த்தகம் அதிக அளவில் நடைபெறு கிறது. இதனால் அப்பகுதியில் உள்ள வளமான விளைநிலங்கள் அழிக்கப்பட்டு வர்த்தகப் பகுதியாக மாற்றப்படுகின்றன.

தேனி மாவட்டத்தில் லோயர்கேம்ப் முதல் பழனிசெட்டிபட்டி வரை 14,707 ஏக்கரில் இருபோக சாகுபடி நடைபெற்று வருகிறது. முல்லை பெரியாறு அணையின் தலைமதகு பகுதி என்பதால் இந்த இடங்கள் நீர்வளம் மிகுந்த பகுதியாக இருந்து வருகிறது. பாசனநீர் மட்டுமின்றி நிலத்தடி நீரும் செறிவாக உள்ளது.

இதனால் நெல் மட்டுமல்லாது கரும்பு, வாழை, தென்னை, மலர் சாகுபடி அதிக அளவில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இப்பகுதி வழியாக திண்டுக்கல் - குமுளி தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது. இதன் மூலம் தேனி மாவட்டத்தின் எல்லைப் பகுதியான தேவதானப்பட்டி முதல்லோயர் கேம்ப் வரை எந்த ஊருக்குள்ளும் செல்லாமல் புறவழிச் சாலையிலேயே வாகனங்கள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வழித் தடத்தில் ஐயப்ப பக்தர்கள், தமிழக,



கேரளா சுற்றுலா பயணிகள் அதிகளவில் பயணித்து வருகின்றனர். மேலும் இரு மாநில வாகனங்களும் அதிக அளவில் பயணிக்கின்றன. இதனால் இந்த புதிய சாலையில் ஹோட்டல், விடுதி, பேக்கரி உள்ளிட்ட வர்த்தக நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டன.

மேலும் சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம் நகருக்குள் உள்ள வியாபார நிறுவனங்களும் புறவழிச் சாலை பகுதிகளில் தங்கள் கடைகளை திறந்துள்ளன. இதுபோன்ற சூழ்நிலையால் புறவழிச் சாலையில் வர்த்தக நிறுவனங்களின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. இதற்காக வளமான விளைநிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் பிற பகுதிகளில் பாசனநீர் பற்றாக்குறை, மகசூல் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை விவசாயிகள் எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் கம்பம் பள்ளத்தாக்கு விளைநிலங்கள் விவசாயிகளை என்றுமே கை விட்டது இல்லை. விளைச்சலை அள்ளித்தந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் வர்த்தக நிறுவனங்களின் வரவால் இப்பகுதி விளைநிலங்கள் அழிக்கப்பட்டு கட்டிடங்களாக உருமாறி வருகின்றன.

இது குறித்து சின்னமனூரைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், இருவழிச் சாலை பயன்பாட்டுக்கு வந்ததில் இருந்தே வர்த்தக கட்டிடங்கள் அதிகரித்து விட்டன. மண்வளமும், நீர்வளமும், பருவநிலையும் சிறப்பாக உள்ள பகுதி இது. இதனால் விவசாயம் பொய்த்துப்போனதே இல்லை. மாவட்ட நிர்வாகம் தலையிட்டு விளைநிலங்களை வர்த்தகப் பகுதியாக மாற்றும் போக்கை தடுக்க வேண்டும் என்று கூறினர்.


விளைநிலங்களை அவ்வளவு எளிதில் வர்த்தகப் பகுதியாக மாற்ற முடியாது. பல ஆண்டுகள் விளைச்சல் இல்லாத பகுதி, விவசாயத்துக்கு பலனளிக்காத நிலம் உள்ளிட்ட காரணங்களை ஆய்வு செய்தே கட்டுமானத்துக்கு அனுமதிக்க வேண்டும் என்ற விதிமுறை உள்ளது.

ஆனால் அதிகாரிகளின் மெத்தனப் போக்கால் இங்கு விளை நிலங்களில் எளிதாக வர்த்தகக் கடைகள் அமைக்கப்படுகின்றன. இதனால் எதிர்காலத்தில் உணவுப் பொருள் உற்பத்தியில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

### ஆரணியில் கூலித் தொழிலாளியின் வீடு

# நள்ளிரவில் தீப்பிடித்து எறிந்ததில் ரூ.1 லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசம் ஆனது





**ஊத்துக்கோட்டை, ஆக14–**

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பிஞ்சலார் தெருவில் வசித்து வருபவர் வசந்தி(வயது36) கூலித் தொழிலாளி ஆவார். இவர் நேற்று முன்தினம் இரவு தனது மகன்கள் பாலாஜி, பார்த்தசாரதி ஆகியோருடன் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். நள்ளிரவில் வீட்டிலிருந்த பொருட்கள் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது.இதனால் திடீரென அவர் அலறி அடித்து எழுந்தார். தனது மகன்களின் உதவியுடன் தண்ணீரை ஊற்றி தீயை அணைக்க முயன்றார்.

ஆனால்,தீ மளமளவென வீடு முழுவதும் பரவி கொழுந்து விட்டு எறிந்தது. அருகில் இருந்தவர்கள் உடனடியாக தேர்வாய் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் அளித்தனர்.10 பேர் கொண்ட தீயணைப்பு மற்றும் மீட்பு குழுவினர் விரைந்து வந்து சுமார் 2 மணி நேரம் போராடி நேற்று விடியற் காலை தீயை அணைத்தனர். இதற்குள் வீட்டில் இருந்த கட்டில்,பீரோ,பிரிட்ஜ்,வாஷிங் மெஷின்,பேன்,துணிகள் உள்ளிட்ட சுமார் ரூ.1லட்சம் மதிப்பிலான பொருட்கள் தீயிக்கு இறையானது.

இச்சம்பவம் குறித்து வசந்தி நேற்று காலை ஆரணி காவல் நிலையத்தில் புகார் செய்தார்.போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் வழக்கு பதிவு செய்து தீ விபத்துக்கு மின் கசிவு காரணமா? அல்லது கேஸ் கசிவு காரணமா? அல்லது வேறு ஏதாவது? காரணமா! என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர். இச்சம்பவத்தால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

# மாளந்தூர் கிராமத்தில் குறைந்த மின் அழுத்தத்தால் ஒரு மாத காலமாக குடிநீர் சப்ளை பாதிக்கப்பட்டுள்ளது

ஊத்துக்கோட்டை, ஆக14–





திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், மாளந்தூர் கிராமத்தில் சுமார் 5,000-க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.இந்த கிராமத்தில் விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வருகிறது.

இந்நிலையில், இக்கிராமத்துக்கு ஊத்துக்கோட்டை துணை மின் நிலையத்தில் இருந்து மின்சார சப்ளை நடைபெற்று வருகிறது. ஆனால்,கடந்த ஒரு மாத காலமாக இக்கிராமத்துக்கு குறைந்த அழுத்த மின்சாரம் சப்ளை செய்யப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.மேலும், அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றதாம். அறிவிக்கப்படாத இந்த மின்தடையால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும்,குறைந்த அழுத்த மின் சப்ளையால் விவசாயத்திற்கு தேவையான தண்ணீரை பாய்ச்ச மின் மோட்டார்களை இயக்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். மேலும், பயிர்கள் தண்ணீர் இன்றி கருகி உள்ளதை விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு தேவையான தண்ணீரை ஊராட்சி மன்றம் சார்பாக சப்ளை செய்ய இயலவில்லையாம்.இதனால் கடந்த ஒரு மாத காலமாக போதிய அளவு குடிநீர் சப்பை செய்யாததால் இக்கிராம பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்களாம். எனவே,சம்பந்தப்பட்ட மின்வாரிய துறை அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு இக்கிராமத்துக்கு தேவையான மின்சாரத்தை போதிய அளவு சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விவசாயிகளின் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள் குறித்து வேளாண் கல்லூரி மாணவ மாணவியருக்கு களப் பயிற்சி

காரைக்கால், ஆக,14



காரைக்கால் மாவட்டம் செருமாவிலங்கை கிராமத்தில் இயங்கிவரும் புதுச்சேரி அரசின் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு சேர்ந்து முதலாமாண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயின்று வரும் 98 மாணவ மாணவியருக்கு விவசாயிகளின் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள் குறித்து நெடுங்காடு கிராமத்தில் இயங்கிவரும் மருதம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் மூன்று நாட்கள் நேரடி களப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கல்லூரியின் இணைப் பேராசிரியர் டாக்டர். எஸ்.ஆனந்த்குமார் தலைமைத்தாங்கினார். அந்நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி, வீரப்பன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மேலும், நிறுவனத்தின் இயக்குனர்களும் மற்றும் முன்னோடி விவசாயிகளுமான நெடுங்காடு ராஜேந்திரன், செல்லூர் மூர்த்தி,கோட்டுச்சேரி, ஞானவடிவேல், கொளக்குடி ஐயப்பன், குரும்பகரம் ரகுநாதன், பஞ்சாட்சரபுரம் ஆனந்த், அன்னவாசல் பத்மநாபன் , திருநள்ளாறு மூர்த்தி ஆகியோர் தங்களது அனுபவங்களை பகிர்ந்து மாணவ மாணவியருக்கு பயிற்சி அளித்தனர்.

வேளாண் விரிவாக்கத்தின் அடிப்படைகள் என்ற பாடத்திட்டத்தின்படி இந்த நேரடி களப்பயிற்சி அளிக்கப்பட்டது. விவசாய வேலைகளுக்கு பணியாளர்கள் பற்றாக்குறை, பருவநிலை மாற்றம், அதனால் ஏற்படும் சீற்றம், உற்பத்திக்கு போதிய விலை கிடைப்பதில்லை, கொள்முதல் மையங்கள் இல்லை, காப்பீடு பலருக்கு கிடைப்பதில்லை, பன்றி, மயில், எலிகள் தொல்லை, பொருத்தமான இயந்திரங்கள் தேவை போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கான தீர்வுகளை கலந்தாலோசித்தனர்.

மூன்று நாட்கள் பயிற்சிக்கான ஏற்பாடுகளை மாணவிகள் அஷ்வினி, பூஜா ஸ்ரீ, சரோஷ்ணி, சுப்ரியா மற்றும் மாணவர்கள் முகில் சந்திரன், புவனேஸ்வர், மித்ரன் ஸ்ரீராம் சாம் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். பயிற்சியின் போது பகிரப்பட்ட கருத்துகளையும் நிகழ்வுகளையும் மாணவ மாணவியர் விஜயராகவன், ஜி.ஜெயபாரதி மற்றும் அலெக்ஸ் வர்கீஸ் ஆவணமாக்கினர்.





காரைக்கால் மாவட்டத்தில் வரும் செவ்வாய்க்கிழமை 76-ஆவது சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெறுவதன் ஒரு பகுதியாக நேற்று காலை இறுதி ஒத்திகை நிகழ்வு (Final Regarsal) கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள சீகல்ஸ் உணவகம் எதிரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. அதன் பிறகு அமைச்சர் உரை மற்றும் காவல்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களின் 21 அணிவகுப்பு நிகழ்வுகள் மற்றும் 10 அரசு பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் வெளிமாநில கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு.மனீஸ் கண்காணிப்பாளர்கள் வடக்கு, மற்றும் தெற்கு செய்தி மற்றும் விளம்பர துறை உதவி இயக்குனர் குலசேகரன், நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் தாமோதரன் உள்ளிட்டோர் இந்திகழ்வில் கலந்து கொண்டார்கள்



புதுச்சேரி அரசு மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் 13ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை அனைத்து வீடுகள் மற்றும் அலுவலகங்களில் தேசிய கொடியேற்றி சுதந்திர தின விழாவை கொண்டாட பொதுமக்களை அறிவுறுத்தி உள்ளது. இதனை காரைக்காலில் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் பலர் வீடுகளிலும், அலுவலகங்களிலும் தேசிய கொடியை ஏற்றி வருகின்றனர். இதனிடையே காரைக்கால் அடுத்த செல்லூர் கிராமத்தில் விவசாய நிலத்தில் பருத்தி சாகுபடி செய்யப்பட்ட பகுதியில் கடைமடை விவசாயிகள் சங்க தலைவர் விவசாயி சுரேஷ் மற்றும் விவசாயிகள் ஆகியோர் 25 க்கும் மேற்பட்ட இந்திய தேசிய கொடியினை தங்கள் விவசாய நிலத்திலும் பறக்க விட்டு பெருமை படுத்தி உள்ளார். பின்னர் தேசிய கீதம் இசைக்கப்பட்டு,பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் மகிழ்ந்தனர்.அரசின் அறிவுறுத்தலின் பேரில் நாட்டுபற்றை வளர்க்கும் விதத்தில் விவசாய நிலத்தில் தேசிய கோடியை ஏற்றி வைத்து கொண்டாடியது பெரும் மகிழ்த்தியாக உள்ளது என விவசாயிகள் கூறுகின்றனர்.



காரைக்கால் மாவட்டம் குடிசை மாற்று வாரியத்தின் கீழ் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் மூலம் நிரவி திருப்பட்டினம் தொகுதியை சார்ந்த பயனாளிகளுக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் பயனாளிகளின் இல்லத்திற்கு சென்று வீடு கட்டுவதற்கு முதல் தவணைக்கான ஆணையை வழங்கினார்.



வடசென்னை புது வண்ணாரப்பேட்டை யில் நடந்து வரும் புத்தக காட்சியில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நீதி அரசர் கிருபாகரன் பரிசுகள் வழங்கினார் ஒருங்கிணைப்பாளர் பாண்டி செல்வம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சதுரங்க கிராண்ட் மாஸ்டர் ஆகாஷ் வழக்கறிஞர் ரவீந்திரன் வழக்கறிஞர் காணிக்கைநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# குற்றாலத்தில் அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் கலந்தாய்வுக் கூட்டம்



தென்காசி,ஆக.14–

அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் நெல்லை மண்டல பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டம் குற்றாலம் தனியார் ஹோட்டலில் வைத்து நடை பெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்துராம், சீவநல்லூர் சாமித்துரை ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர், கூட்டமைப்பின் நிறுவனர் மற்றும் தேசியத் தலைவர் ஹென்றி தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், மலைப்பகுதியில் அமைந்துள்ள இடங்களை 10 சென்ட்க்கும் மேல் பதிவுத் துறையின் வழிகாட்டுதலின் படி நிலமாகவோ, அல்லது பண்ணை நிலமாகவோ, அதன் பயன்பாட்டை குறிப்பிட்டு பதிவு செய்வதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும் என்றும், வழிகாட்டி மதிப்பில் உள்ள குளறுபடிகளை அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ரியல் எஸ்டேட் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்புக்கு குழு அமைத்து சரி செய்வதற்கு குறைந்தபட்சம் 25 சென்ட் பரப்பளவிற்கு மேல் உள்ள வேளாண் பயன்பாட்டு நிலங்களை மனை மதிப்பாக இருக்கும் பட்சத்தில் அதன் உண்மை தன்மை மற்றும் பயன்பாட்டினை கண்டறிந்து ஆவணம் பதிவு செய்யும் வகையில் குறைவு முத்திரை தீர்வை கீழ் நான்கு பக்க எல்லையில் அமைந்துள்ள சொத்தின் உச்சபட்ச நில மதிப்பு அடிப்படையில் நிலமாகவே பதிவு செய்ய அரசு வழிவகை செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இதில் நிறை வேற்றப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, தொழிலதிபர்கள் சுந்தர மகாலிங்கம், ரஜப் முகமது, பானகிருஷ்ணன், தேசிய செயலாளர் ஜெயச்சந்திரன், துணைத்தலைவர் செந்தில்குமார், துணை செயலாளர்கள் கிருஷ்ண குமார், சக்திவேல், மாநிலச் செயலாளர் மோகன், இணைச் செயலாளர் ராஜா, தலைமை நிலைய செயலாளர் கார்த்திக், செயற்குழு உறுப்பினர் பிரியா காந்தன், கோவை மாவட்டத் தலைவர் கணேஷ் குமார், நெல்லை மாவட்ட பொறுப்பாளர் பரஞ்சோதி பாண்டியன், தூத்துக்குடி மாவட்டப் பொறுப்பாளர் காளிராஜ், திருச்செந்தூர் தாலுகா பொறுப்பாளர் காயல்பட்டினம் சித்திக், உறுப்பினர்கள் தட்சிணா மூர்த்தி, ஹரிபாபு, சுரேஷ், மனோகரன், சார்லஸ், சாகுல் ஹமீது, நஜீம், சித்திக், சிவக்குமார், ரமேஷ், ரவீந்திரன், முபாரக், உள்ளிட்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# காரைக்காலில் அனைத்து விவசாயிகள் சங்கம் சார்பில் கோரிக்கை முதல்வரை சந்திக்க முடிவு

காரைக்கால், ஆக,14



காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நல சங்க நிர்வாகிகளை காரைக்கால் மாவட்ட காவேரி பாசன விவசாயிகள் சங்கத்தினர் சந்தித்து பேசினர் இந்த நிகழ்ச்சிக்கு காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நல சங்க நிறுவனர் கேசவன் தலைமையிலும் தலைவர் பொன். ராஜேந்திரன். காரைக்கால்மாவட்ட காவேரி பாசன விவசாயிகள் சங்க நிறுவனர் சிங்கரவேலு, தலைவர் யாசின் முன்னிலையிலும் நடைப்பெற்றது. கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டது.

காவிரியில் தண்ணிர் திறந்தும் காரைக்காலுக்கு தண்ணி வரவில்லை, விவசாயிகள் கையிலே காசும் இல்லை, காரைக்கால் விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய வழியும் இல்லை, 1. ஜூன் 12 ம் தேதி மேட்டுரில் தண்ணிர் திறந்து விட்டும் இன்றைய நாள் வரை காரைக்கால் பகுதிக்கு தண்ணிர் வந்து சேர வில்லை எனவே புதுச்சேரி அரசு விரைந்து நடவடிக்கை ஏடுத்து காரைக்காலுக்கு உரிய காவேரி தண்ணிரை பெற்று தந்து சம்பா,தாளடியைவது விவசாயம்செய்ய வழிவகுக்க வேண்டும்.. 2. இரண்டு முறை சட்டமன்றத்தில் முதல்வர் தொடக்க வேளாண்மை கடன் வழங்கும் சங்க கடன் தள்ளுபடி என அறிவித்தும் இன்றைய தேதி வரை அரசு ஆணை வராதால் விவசாயிகள் கடந்த மூன்று ஆண்டுகளாக கடன் பெற முடியாமல் பரிதவித்து நிற்கும் நிலைமையில் இருக்கிறோம் எனவே முதல்வர் அறிவித்தப்படி கடன் தள்ளுபடிக்கான அரசு ஆணையை உடனே வழங்கி விவசாயிகளுக்கு மீண்டும் கடன் கொடுக்க ஆணை இட வேண்டும் என இரண்டு கோரிக்கையினை புதுச்சேரி முதல்வரை வருகிற 17. ம் தேதி வியாழகிழமை இரண்டு சங்க கூட்டு குழவினர் நேரில் சந்தித்து மனு கொடுத்து தீர்வு காண்பது என முடிவு ஏடுக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நல சங்கத் துணை தலைவர் ஷேக் முகமது. இணை செயலாளர் சோமு. காரைக்கால் மாவட்ட காவேரி பாசன விவசாயிகள் சங்க துணை தலைவர் கனகாசுந்தரம். காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நல சங்க செய்தி தொடர்பாளர் செல்வகணபதி. செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன். அருணாசலம்.. ராஜமாணிக்கம்.. முகமதுஇப்ராஹிம் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தை சிறப்பாக ஏர்பாடு நன்றி கூறினார் காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நல சங்கம் தலைவர் பொன் ராஜேந்திரன் நன்றி தெரிவித்தார்

# சங்கரன்பந்தலில் லயன்ஸ் கிளப் அரவிந்தன் கண் மருத்துவமனை இணைந்து கண் சிகிச்சை முகாம்





**தரங்கம்பாடி, ஆக- 14:**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, சங்கரன்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் லயன்ஸ் கிளப், சங்கரன்பந்தல் ஜெயதாரணி ஜுவல்லரி, வெங்கடேஸ்வரா ஜுவல்லரி, ரத்தன் ஜுவல்லரி, நாகை- மயிலாடுதுறை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் மற்றும் பாண்டிச்சேரி அரவிந் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு சங்கரன்பந்தல் லயன்ஸ் சங்க தலைவர் பொறியாளர் ராஜகணபதி தலைமை வகித்தார். லயன்ஸ் சங்க செயலாளர் லயன். சுப்பிரமணியன், பொருளாளர் லயன்.சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரவிந்த்கண்மருத்துவர்மனை மருத்துவர்கள் சந்தீப், பிரபு ஆகியோர் தலைமையிலான மருத்துவ குழுவினர் கண் சம்பந்தப்பட்ட குறைபாடுகளானகிட்டபார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து, கண்புரை நோய் நோய்கள் பரிசோதனைகள் உள்ளிட்ட கண் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் இலவசமாக பரிசோதனை செய்யப்பட்டது.

இம்முகாமில் கண் பிரச்சனைகள் அதிகம் உள்ளவர்கள் மற்றும் கண் அறுவை சிகிச்சை செய்து கொள்ள விரும்பும் நோயாளிகள் மருத்துவக் குழுவினரால் முழு பரிசோதனை செய்யப்பட்டது தொடர்ந்து மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 100-க்கும் மேற்பட்டவர்கள் பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனைக்கு ஜெயதாரணி ஜுவல்லரி உரிமையாளர் ரமேஷ், வெங்கடேஸ்வரா ஜூவெல்லரி உரிமையாளர் கார்த்தி, ரத்தன் ஜுவல்லரி உரிமையாளர் ரத்தன், லயன் ராஜாராமன் ஆகியோரின் ஏற்பாடுகளில் அழைத்துச் சென்று அவர்களுக்கு ஐ.ஒ.எல், லென்ஸ், அறுவை சிகிச்சை, மருந்து, உணவு, தங்கு வசதி மற்றும் போக்குவரத்து செலவுகளை இலவசமாக வழங்கினர்.

முகாமில் சங்கரன்பந்தல் சுற்றியுள்ள உத்திரங்குடி, நெடுவாசல், பட்டவரம், இலுப்பூர், திருவிளையாட்டம், கூடலூர், நல்லூச்சேரி, பூதனூர், எடுத்துக்கட்டி சாத்தனூர், நல்லாடை, கொத்தங்குடி உள்ளிட்ட கிராமங்களில் இருந்து 400-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண் பரிசோதனை செய்து சிகிச்சை பெறுவதற்கான கலந்துகொண்டு பயனடைந்தனர். மேலும் முகாமை அமைத்த லயன்ஸ் கிளப், ஜுவல்லரி உரிமையாளர்கள், அரவிந்தன் மருத்துவமனை மற்றும் மருத்துவர்களுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்,.

# ஆவுடையார்கோவில் அருகே ஏம்பலில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விசிக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

ஆவுடையார்கோவில், ஆக.14–



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா ஏம்பல் பேருந்து நிலையம் குடியிருப்பு பகுதியில் ரேஷன் கடை அருகில் அமைந்துள்ள டாஸ்மாக் கடையை உடனடியாக அகற்ற கோரியும், மணிப்பூர் மற்றும் அரியானா மாநிலங்களில் மூன்று மாத காலமாக நடந்து கொண்டிருக்கின்ற கலவரங்களை கட்டுப்படுத்த தவறிய ஒன்றிய அரசை கண்டித்தும், ஏம்பல் பேருந்து நிறுத்தத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அரிமளம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளரும் மாவட்ட அமைப்பாளராகிய சுடர்மணிதலைமைதாங்கினார், மேற்கு மாவட்டச் செயலாளர் வெள்ளைநெஞ்சன், தெற்கு மாவட்டச் செயலாளர் இரா. தமிழ்செல்வன், மாவட்ட துணைச் செயலாளர் திருமாறன், மாவட்ட ஆவண காப்பக அன்பரசு, ஒன்றிய ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கருத்தியல் பரப்பு மாநில துணைச் செயலாளர் மோட்ச குணவழகன், கருத்தியல் மாநில துணைச் செயலாளர் கலைமுரசு, புதுகை தஞ்சை மண்டல துணைச் செயலாளர் திருமாறவன், புதுகை தஞ்சை மண்டல துணை செயலாளர் சின்ன பழகு, மாவட்டச் செயலாளர் சிவகங்கைஇளைய கவுதமன், கருத்தியல் பரப்பு மாநில துணைச் செயலாளர் ஷாஜகான் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர், நிகழ்ச்சியில் 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தனது கண்டனத்தை பதிவு செய்தார்கள் கண்டன கோஷங்களும் எழுப்பப்பட்டது நிகழ்ச்சிக்கு ஏம்பல் காவல்துறையினர் பாதுகாப்பு பணியை மேற்கொண்டனர்.



தென்காசி மாவட்டம், மேலகரம் பகுதியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பொதுமக்களுடன் இணைந்து நடப்போம் நலம் பெறுவோம் என்னும் விழிப்புணர்வு நடைபயணம் மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சியர் துரை ரவிச்சந்திரன் கலந்து கொண்டார்.

“சமாதானம் அடைய விரும்பவில்லை”

# ஊட்டச்சத்துக் குறைபாடு குறித்து முதல்வர் ஸ்டாலின் கருத்து

சென்னை , ஆக.14–

“ஊட்டச்சத்து குறைபாட்டில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் நாம் நல்ல நிலையில் இருக்கிறோம் என்று நான் சமாதானம் அடைய விரும்பவில்லை” என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், “பல்வேறு மாவட்டங்களுக்கு நான் ஆய்வுப் பணிகளுக்குச் செல்லும்போது, ஓர் அங்கன்வாடி மையத்தில், மிகவும் மெலிந்த ஒரு குழந்தையைப் பார்த்தேன். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டபோது, ஊட்டச்சத்துக் குறைபாடு என்றார்கள்.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் நாம் நல்ல நிலையில் இருக்கிறோம் என்று நான் சமாதானம் அடைய விரும்பவில்லை. அந்த நிலையை மாற்ற வேண்டும் என உடனே தொடங்கப்பட்ட திட்டம்தான் #ஊட்டச்சத்தை_உறுதிசெய்!” எனப் பதிவிட்டுள்ளார். ஒரு காணொளியை வெளியிட்டு அதற்கு இந்த விளக்கத்தை அவர் பதிவிட்டுள்ளார்.

ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்: ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மற்றும் சுகாதாரத் துறை ஒன்றிணைந்து, 6 வயதுக்கு குழந்தைகளில் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள் மற்றும் ஊட்டச்சத்து தேவைப்படும்குழந்தைகள் ஆகியோரைப்பிரித்தறிந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை நீக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 6 வயதுவரையுள்ளமிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 9.3 லட்சம் குழந்தைகள் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டார்கள். அதில் 43,200 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை உள்பட வெவ்வேறு மருத்துவ சிகிச்சைகள் மாவட்ட ஆரம்ப சிகிச்சை மையங்களில் அளிக்கப்பட்டது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் பிறவியிலேயே கண்டறியப்பட்ட இருதய நோய், பிறவியிலேயே கண்டறியப்பட்ட மூளை வளர்ச்சி குறைபாடு, பிறவி பார்வை குறைபாடு, பிறவி காது கேளாமை, பிறவி கால் ஊனம் போன்ற பிறவி குறைபாடுகளை உடைய 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தற்பொழுது அவர்கள் நலமாக உள்ளனர் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

முன்னதாக நேற்று தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டில் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப்போக்கும் வகையில் "ஏற்றமிகு ஏழு திட்டங்கள்" கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் மூலம் பயன்பெற்றவருண் (வயது 4), நுசாய்பா (வயது 2) மற்றும் சாய்திரன் (வயது 2.5) ஆகிய குழந்தைகளின் பெற்றோர்களிடம் அக்குழந்தைகளின் உடல்நலம் குறித்து விசாரித்தறிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்காசி மாவட்டம் புளியங்குடியில்

# திருஞானசம்பந்தர் நடுநிலைப் பள்ளியில் 76– வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை மருத்துவ முகாம்

தென்காசி, ஆக.14–

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் திருஞானசம்பந்தர் நடுநிலைப் பள்ளியில் 76– வது சுதந்திர தினத்தை முன்னிட்டு வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன், புளியங்குடி மருதம் மாடசாமி கலைவாணி தொண்டு அறக்கட்டளை, சங்கரா கண் மருத்துவமனை இணைந்து இலவச கண் சிகிச்சை மருத்துவ முகாமை நடத்தியது.




இம்முகாமிற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார போக்குவரத்துறை சுந்தர் ராஜ், மருதம் தொண்டு அறக்கட்டளை நிறுவனர் முகேஷ் சிங் மாடசாமி தலைமை வகித்தார். திருஞானசம்பந்தர் நடுநிலைப் பள்ளி ஆசிரியர் கணேஷ், புளியங்குடி தொழிலதிபர் மாடசாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர், தென்காசி வருவாய்துறை அதிகாரி அருண்குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சிறப்பு அழைப்பாளராக வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் நிறுவனர் அ.ஆனந்தன் கலந்து கொண்டு இலவச கண் சிகிச்சை முகாமை தொடங்கி வைத்து பேசினார். அப்போது பேசியதாவது, சுமார் 6-50 கோடிக்கு மேலாக இந்தியாவில் கண் நோயாளிகளக இருக்கிறார்கள், கிட்டத்தட்ட ஒரு கோடி மக்கள் கண் பார்வை இழந்து இருக்கிறார்கள், உலகத்திலேயே அதிக கண் நோய் பாதிப்பு நாடாக இந்தியா இருக்கிறது.

அப்படி இருந்தும் கண் மருத்துவர்கள் தேவையில் இந்தியாவில் 5-ல் ஒரு மடங்கு தான் கண் மருத்துவர்கள் இருக்கிறார்கள் குறிப்பாக கிராமப்புறத்திலும், சிறு நகரங்களிலும் கண் மருத்துவர்கள் இருப்பு மிகவும் குறைவாக உள்ளது. ஆதலால் தொண்டு நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும், சுதந்திர தினம் போன்ற பிறந்தநாள் தினங்களை கொண்டாடும் போது இது போன்று கண் சிகிச்சை முகாம்களை நடத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்தி பொதுமக்கள் நலம் காக்க வேண்டும் என்று பேசினார்.

முகாமில் கலந்து கொண்டு பரிசோதனை செய்த அனைவருக்கும் 76 -வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசியக்கொடி அவரவர் தங்கள் இல்லத்தில் கட்டுவதற்காக வழங்கப்பட்டது. இதில் சங்கரா கண் மருத்துவமனை மருத்துவர் மற்றும் செவிலியர் முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு கண் பரிசோதனை செய்தனர். இந்நிகழ்ச்சியில் வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் நிர்வாகிகள் மற்றும் மருதம் தொண்டு நிறுவன நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் மருதம் தொண்டு நிறுவன நிர்வாகி கிருஷ்ணகுமார், கற்பகராஜ் நன்றி கூறி அரசு தேர்வுகளில் கலந்து கொள்ள ஊக்கமளித்து வரும் மருதம் அறக்கட்டளையின் சார்பாக மாணவர்களுக்கு சேர்க்கை நடைபெற்று வழிகாட்டுதலை ஏற்படுத்த உள்ளனர்.

# “இந்தியை திணிக்கவே 3 சட்டங்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன” மாணிக்கம் தாக்கூர் எம்.பி. குற்றச்சாட்டு

மதுரை , ஆக.14–

“இந்தியை திணிக்கவே 3 சட்டங்களை பெயர் மாற்றி பிரதமரும், அமித்ஷாவும் அறிமுகப்படுத்தியுள்ளனர்” என விருதுநகர் தொகுதி காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் குற்றஞ்சாட்டினார்.



இது தொடர்பாக மதுரை திருநகரில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஏமாற்றம் அளித்தது. மணிப்பூர் பிரச்சினை பற்றி மோடி நாடாளுமன்றத்தில் பேச வேண்டும் என்பது தான் இண்டியா கூட்டணியின் கோரிக்கை. ஆனால் அவர் பிரதமரைப் போல் இன்றி பாஜக கட்சித் தலைவராக பேசினார்.

ராகுல் காந்தியின் பேச்சை நாடாளுமன்றத்தில் பதிவிடாமல் கூச்சலிடுவதுதான் பாஜகவின் ஜனநாயகம். எதிர்க்கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரியை சஸ்பெண்டு செய்திருப்பது 75 ஆண்டு கால நாடாளுமன்ற வரலாற்றில் நடக்காதது. நாடாளுமன்றம் ‘மன்கி பாத்’ மன்றமாக மாறியது. இந்தியை திணிக்கும் வகையில் 3 சட்டங்களையும் இந்தியில் பெயர் மாற்றி அறிமுகம் செய்து, பிரதமரும் அமித்ஷாவும் ஒரு தலைபட்சமாக செயல்படுவது தொடர்கிறது.

நீட் விவகாரத்தில் தமிழ்நாடு ஆளுநர் பேசியிருப்பது அகங்காரத்தின் உச்சம். பாஜக தலைவரை போன்று பேசும் ஆளுநரின் செயல் கண்டிக்கத்தக்கது. இபிஎஸ் கூறியிருப்பதைப் போல, நாடாளுமன்றம் நடந்தால் தான் பேச முடியும். நாங்குநேரியில் நடந்ததை கூட அருகில் இருப்பவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் நிலையில் இருக்கிறார் எடப்பாடி. நாடாளுமன்றம் நடக்கவில்லை என, அவருக்கு யாராவது சொல்ல வேண்டும்.

டி.கே.சிவக்குமார் அமைச்சரான பிறகு தண்ணீர் இருந்தால் கொடுப்போம். இல்லையெனில் கொடுக்க மாட்டோம் என, கூறியிருப்பது தவறு. இதை கண்டிக்கி றோம். அங்கு யார் ஆட்சியாக இருந்தாலும், சேர்ந்து முடிவெடுக்கின்றனர். தமிழகத்தில் மட்டும்தான் ஆட்சி பார்த்து பேசும் நிலையில் இருக்கிறோம். காங்கிரஸ் கட்சி காவிரி விவகாரத்தில் 100 சதவீதம் தமிழக அரசின் நிலையில் நிற்போம். முதல்வர் இதற்காக என்ன சொல்கிறாரோ காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்வோம்.

மதுரை, விருதுநகரில் பயணம் செய்த அண்ணாமலை மதுரை எய்ம்ஸ், கப்பலூர் டோல்கேட் , மதுரை விமான நிலைய 24 மணி நேர சேவை குறித்து எதுவும் பேசவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் என்ன செய்யவேண்டும் என எங்களிடம் சொல்வதைக் காட்டிலும், அவர் பிரதமர் , மத்திய அமைச்சர்கள் என்ன செய்யவேண்டும் என, அவர்களிடம் சொல்லவேண்டும். எங்களது தொகுதிக்கான பிரச்சினைகளை குறித்து பேசாத அண்ணாமலை எங்களைக் கேள்வி கேட்க அருகதைஇல்லை. மதுரை விமான நிலைய விரிவாக்கத்துக்கான நிலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆறு ஏக்கர் நீர்நிலை நிலம் மட்டும் மிஞ்சி உள்ளது. சுற்றுச்சுவர் பணி நடக்கிறது. பிறவேலை முடிவதற்குள் நிலங்கள் ஒப்படைக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# பயன்பாட்டுக்கு வந்த 10 நாட்களில் முடங்கிய சிங்காரப்பேட்டை குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்



கிருஷ்ணகிரி , ஆக.14–

சிங்காரப் பேட்டையில் ரூ.7.50 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் பயன்பாட்டுக்கு வந்த 10 நாட்களில் முடங்கியது. இதனை சீரமைத்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட ஊராட்சி சிங்காரப்பேட்டை. பெங்களூரு - புதுச்சேரி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள சிங்காரப்பேட்டையில் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகள், சிங்காரப்பேட்டை, குருகப்பட்டி, கென்னடி நகர், மேட்டுத் தெரு மற்றும் சுற்றுவட்டாரங்களில் வசிக்கும் மக்களின் தேவைக்காக குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப் பட்டுள்ளது.

மத்திய அரசின், திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி மாவட்ட கனிமவள அறக்கட்டளை நிதியின் மூலம் ரூ.7.50 லட்சம் மதிப்பில் குடிநீர் சுத்திகரிப்பு மையம், கட்டிடத்துடன் கடந்த 2018-19-ம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதன் மூலம் 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ரூ.5-க்கு விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் பயணிகள் மற்றும் அப்பகுதி மக்களுக்கு பயன்பெற வேண்டிய நிலையில், சுத்திகரிப்பு நிலையம் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்ட 10 நாட்களில் பழுதால் முடங்கி உள்ளது.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறும்போது, சுத்திகரிக்கப்பட்ட ஒரு கேன் (25 லிட்டர்) தண்ணீர் ரூ.30-க்கு வாங்கி பயன்படுத்த வேண்டிய நிலை காணப்படுகிறது. இதேபோல் தான் பேருந்து நிலையத்தில் காத்திருக்கும் பயணிகள் தாகத்தை தீர்க்க ஒரு லிட்டர் தண்ணீர் ரூ.20-க்கு வாங்கி குடிக்கின்றனர். இங்கு வசிக்கும் பொதுமக்கள், பயணிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், மத்திய அரசு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், திறக்கப்பட்டு 10 நாட்களில் பழுதானது.

இதனை, ஒப்பந்தம் எடுத்தவர்கள் சீரமைத்தனர். ஆனால் அடுத்த இரு நாட்களில் மீண்டும் பழுதாகிவிட்டது. தற்போது வரை சீரமைக்காமல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் பூட்டியே உள்ளது. இதனால் ஆர்.ஓ., குடிநீரை கூடுதல் விலைக்கு வாங்கி பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது.

எனவே, ரூ.7.50 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்டுள்ள பழுதை சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும், என்றனர். இது குறித்து அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளிடம் கேட்ட போது, ஓரிரு நாட்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலைய பழுதை சரி செய்ய ஒப்பந்ததாரரிடம் அறிவுறுத்தி, பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும், என்றனர்.

# பிரதமர் மோடியின் சகோதரர் மதுரை மீனாட்சி அம்மன், திருப்பரங்குன்றம் முருகன் கோயில்களில் தரிசனம்



மதுரை , ஆக.14–

பிரதமரின் சகோதரர் பங்கஜ் மோடி மற்றும் அவரது குடும்பத்தினர் மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் நேற்று தரிசனம் செய்தனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் சகோதரர் பங்கஜ் மோடி தனது குடும்பத்துடன் டெல்லியில் இருந்து சனிக்கிழமை மாலையில் ஆன்மிக பயணமாக மதுரை வந்தார். நேற்று காலையில் மீனாட்சி அம்மன் கோயிலில் குடும்பத்துடன் தரிசனம் செய்தனர். அவர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கோயிலின் சிறப்புகள் குறித்து சிவாச்சாரியார்கள் விளக்கினர். நேற்று நடந்த ஆவணி மூலத்திருவிழா கொடியேற்றம் குறித்தும் விளக்கினர். சுவாமி சன்னதி, அம்மன் சன்னதிகள் உள்பட பல்வேறு சன்னதிகளுக்கும் சென்று சுமார் 45 நிமிடங்களுக்கு மேல் தரிசனம் செய்தனர்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு சென்றனர். அங்கு கோயில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டு சிவாச்சாரியார்கள் கோயில்களுக்குள் அழைத்துச் சென்றனர். அங்கு குடும்ப உறுப்பினர்களுடன் தரிசனம் செய்தனர். பின்னர் சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடைபெற்றன. அவர்களுக்கு கோயில் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. பின்னர் கார் மூலம் ராமேஸ்வரம் புறப்பட்டு சென்றனர்.

# ”சட்டப்பேரவையில் ஜெயலலிதா அவமானப்படுத்தப்பட்டது உண்மை; நானே சாட்சி” – எடப்பாடி பழனிசாமி

சென்னை , ஆக.14–

சட்டப்பேரவையில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவமானப் படுத்தப்பட்டது உண்மை தான் எனவும், அப்போது அவையில் இருந்த தானே அதற்கு சாட்சி எனவும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



தற்போது, தாக்குதல் நடைபெறவில்லை என கூறும் காங்கிரஸ் எம்பி திருநாவுக்கரசர், அப்போது அதை தடுத்ததாக கூறினார்.

இது போன்ற கொடுமையான நிகழ்வுகள் சட்டமன்ற வரலாற்றிலேயே நடைபெற்றதில்லை என அவர் குறிப்பிட்டார். 1989 மார்ச் 25-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்தின் கருப்பு நாள் எனவும் எடப்பாடி பழனிசாமி சாடினார்.

சட்டப்பேரவையில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவமானப் படுத்தப்பட்டது உண்மை தான் எனவும், அப்போது அவையில் இருந்த தானே அதற்கு சாட்சி எனவும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தற்போது, தாக்குதல் நடைபெறவில்லை என கூறும் காங்கிரஸ் எம்பி திருநாவுக்கரசர், அப்போது அதை தடுத்ததாக கூறினார்.

இது போன்ற கொடுமையான நிகழ்வுகள் சட்டமன்ற வரலாற்றிலேயே நடைபெற்றதில்லை என அவர் குறிப்பிட்டார். 1989 மார்ச் 25-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்தின் கருப்பு நாள் எனவும் எடப்பாடி பழனிசாமி சாடினார்.

‘துச்சாதனனின்’ நவீன முகமான திமுகவினருக்கு, தெய்வமான திரௌபதி குறித்தோ, பெண்ணுரிமை பற்றியோ பேச எந்தத் தகுதியும் இல்லை..


நிதி அமைச்சர் இந்த குற்றச்சாட்டினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் உட்பட பலரும் மறுத்து வருகின்றனர். முன்னதாக, ஆங்கில நாளிதழுக்கு பேட்டியளித்த முதல்வர், “ சட்டப்பேரவையில் ஜெயலலிதாவிற்கு அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றும் இது ஜெயலலிதாவால் நடத்தப்பட்ட நாடகம் என்பது அப்போது அவையில் இருந்த அனைவருக்கும் தெரியும் என்றும் கூறினார்.

மேலும், தற்போதைய திருச்சி தொகுதி எம்.பி.,யும், முன்னாள் அமைச்சருமான திருநாவுக்கரசர், ஜெயலலிதா தனது போயஸ் கார்டன் இல்லத்தில் ஏற்கனவே ஒத்திகை பார்த்துவிட்டு வந்து நாடகத்தை அரங்கேற்றியதாக சட்டப்பேரவையிலேயே தெரிவித்திருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார். மேலும், தனியார் நிறுவனத்துக்கு பேட்டி அளித்த எம்.பி திருநாவுக்கரசரும் நிதி அமைச்சர் குற்றச்சாட்டை முற்றிலுமாக மறுத்துள்ளார்.



சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ஒன்றிய குழுவின் சிறப்பு கூட்டம், ஒன்றிய குழு தலைவர் எச். லாவண்யா ஹேம்நாத் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் நாகேஷ், ரத்னம்மா, லஷ்மம்மா, பாக்கியவதி, புஷ்பா, முனிரத்னா, தமிழ்செல்வி, மஞ்சுளா, யசோதா, சங்கீதா, லதா, கான்ஞ்சனா, வனீதா, ஹரிஷ், முனிராஜ், வரதன், சேட்டு ஆகியோர் கலந்துக் கொண்டனர்.


PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# பழங்குடியினர்களே நாட்டின் உண்மையான உரிமையாளர்கள்

# நாங்குநேரி மாணவனுக்கு ஸ்டாலின் மருத்துவர்கள் மூலம் உயர்தர சிகிச்சை





# ஜாதி பிரச்சனைக்கு திமுக தான் காரணம் அண்ணாமலை அதிர்ச்சி தகவல்


| சென்னை / புதுக்கோட்டை | 14.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**வெ. ப. சுப்பிரமணிய முதலியார்** , தமிழக கால்நடை மருத்துவர். மொழிபெயர்ப்பாளர், கவிஞர் (பி.1857) (இ.1946)



**என். எம். ஆர். சுப்பராமன்** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1905) (இ.1983)



**வேதாத்திரி மகரிசி** , இந்திய ஆன்மீகத் தலைவர் (பி.1911) (இ.2006)



**அங்கையன் கைலாசநாதன்** , ஈழத்து எழுத்தாளர் (பி.1942) (இ.1946)



## இன்றைய நினைவு நாள்

**என். எம். பெரேரா** , இலங்கையின் மாக்சியவாதி, அரசியல்வாதி (பி.1905) (இ.1979)



**எட்வர்ட் குபேர்** , புதுச்சேரியின் 1வது முதலமைச்சர் (பி.1894) (இ.1979)



**விலாஸ்ராவ் தேஷ்முக்** , மகாராட்டிராவின் 14வது முதலமைச்சர் (பி.1945) (இ.2012)

